பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

22 05 2025 6 30
வியாழக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தீவிரவாதத்திற்கு ஆதரவு அளித்து வரும் பாகிஸ்தானுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- ஒருமுறை பயன்பாட்டிற்கான பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த தேசிய அளவிலான விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

- சட்டப்பேரவைத் தேர்தலில் திமுகவை வீழ்த்துவதற்கு ஒத்த கருத்துடைய கட்சிகள் ஓரணியில் திரள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

- அரபிக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Chirag Sharma** இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

தீவிரவாதத்திற்கு ஆதரவு அளித்து வரும் பாகிஸ்தானுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் **Bikaner**-ல் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் நவீனமயமாக்கப்பட்ட 103 ரயில் நிலையங்களை இன்று காணொலி வாயிலாக திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் முப்படையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டு தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதாக பிரதமர் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் மூலம் 22 நிமிடங்களில் பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் நம் நாட்டின் கலாச்சாரத்தை எடுத்துரைக்கும் வகையில் 103 ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு இன்று திறக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

தமிழகத்தில் திருவண்ணாமலை, குழித்துறை, ஸ்ரீரங்கம், மன்னார்குடி, பரங்கிமலை, சிதம்பரம், போளூர், சாமல்பட்டி, விருத்தாச்சலம் ஆகிய 9 ரயில் நிலையங்கள் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் நவீனமயமாக்கப்பட்டு இன்று திறக்கப்பட்டுள்ளன.

சென்னை பரங்கிமலை ரயில் நிலைய திறப்பு விழாவில் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் பங்கேற்று பேசினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் சாமல்பட்டி ரயில் நிலையம் நவீனமயமாக்கப்பட்டது குறித்து அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

<<<<>>>>

ஒருமுறை பயன்பாட்டிற்கான பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த தேசிய அளவிலான விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

சர்வதேச சுற்றுச்சூழல் தினம் அடுத்த மாதம் 5ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், பிளாஸ்டிக் பயன்பாட்டினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் குறித்து எடுத்துரைப்பதற்காக இந்த இயக்கம் நடத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த இயக்கம் நடத்தப்படுவதாகவும் அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

அரபிக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் நாளை மறுநாள் தொடங்கி வரும் திங்கட்கிழமை வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்தார்.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தலில் திமுகவை வீழ்த்துவதற்கு ஒத்த கருத்துடைய கட்சிகள் ஓரணியில் திரள வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கான கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர்கள் திரு. கோவி. செழியன், திரு, மெய்யநாதன் ஆகியோர் இன்று தொடங்கி வைத்தனர்.

-----------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்களுக்கான இலவச மருத்துவ விழிப்புணர்வு முகாம் வரும் 29ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------

மதுரை மாவட்டத்தில் பள்ளி வாகனங்களின் நிலை குறித்து ஆட்சியர் திருமதி சங்கீதா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

----------

திருப்பத்தூர் மாவட்டத்தில் தீயணைப்புத்துறை சார்பில் பேரிடர் பாதிப்பு மீட்புப் பணிகள் குறித்த ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

------------

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆட்சியர் திரு. இளம் பகவத் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் **Chirag Sharma** இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியின் **Suhl-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவு தகுதிச் சுற்றில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் அவர் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

இங்கிலாந்துக்கு எதிரான 19 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Ayush Mhatre** தலைமையிலான இந்த அணியில் **Vaibhav Suryavanshi** இடம்பெற்றுள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையே 5 ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ளது.

--------------

கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தானுக்கு எதிரான 23 வயதுக்கு உட்பட்டோருக்கான நட்புணர்வு கால்பந்துப் போட்டியில் பங்கேற்பதற்கான 29 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தஜிகிஸ்தானின் **Dushande-**வில் அடுத்த மாதம் 18 மற்றும் 21ஆம் தேதிகளில் இப்போட்டிகள் நடைபெற உள்ளன.

இதற்கான பயிற்சி முகாம் கொல்கத்தாவில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்குகிறது.

----------------

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டைப் போட்டியில் பங்கேற்பதற்கான 19 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் 10 பேரும், மகளிர் பிரிவில் 9 பேரும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி பாங்காக்கில் நாளை மறுநாள் தொடங்கி அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வரை நடைபெற உள்ளது.

கெய்ரோவில் நடைபெற்று வரும் சர்வதேச ஷ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ரமீத் டான்டன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**